ෆැක්ස් අංකය
தொலைநகல்
Fax No. 2323730

ඊ-මේල්
மின்னஞ்சல்
E-mail cabsecsl@sltnet.lk

වෙබ් අඩවිය
வெப் தளம்
Web Site www.CabinetOffice.gov.lk

# අමාත්‍ය මණ්ඩල කාර්යාලය
# அமைச்சரவை அலுவலகம்
# OFFICE OF THE CABINET OF MINISTERS

இணைப்பு 1

ජනරජ චතුරශ්‍රය, ශ්‍රීමත් බාරොන් ජයතිලක මාවත, කොළඹ 01.
குடியரசுச் சதுக்கம், சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01.
Republic Square, Sir Baron Jayathilaka Mawatha, Colombo 01.

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

2010 மே மாதம் 05

மாண்புமிகு பிரதம அமைச்சருக்கும்
மாண்புமிகு அமைச்சர்களுக்கும்.

## அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கான விஞ்ஞாபனங்கள் தொடர்பிலான வழிகாட்டல்கள்

அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சம்பந்தமாக செயலாளர்களுக்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அமைச்சரவை விஞ்ஞாபனங்களில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளின் நிமித்தம் அமைச்சரவையானது தனது தீர்மானத்தை எடுப்பதில் சமீபத்திய கடந்த காலத்தில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கிய பல சந்தர்ப்பங்கள் இருந்தன. இந்த நிலைமையை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு தங்களுடைய அமைச்சின் செயலாளருடைய கவனம் பின்வரும் வழிகாட்டல்களுக்கு ஈர்க்கப்படலாம்.

### 01. அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்பட வேண்டிய விடயங்கள்:

சில அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் மூலம் அங்கீகாரம் நாடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவைப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. **அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்பட வேண்டியது அரசியலமைப்பின் அல்லது பிற எந்த எழுத்திலான சட்டத்தின் கீழும் அல்லது நிருவாக ஒழுங்குவிதியின் கீழும் பிற அதிகாரபீடங்களின் / நிறுவனங்களின் கீழ் கையளிக்கப்பட்ட விடயங்களைத் தவிர்த்து அரசாங்கத்தின் சார்பில் எடுக்கப்படவுள்ள முக்கியமான தீர்மானங்களுக்கு மட்டுமேயாகும்.** இதற்கமைவாக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பிரதானமாக வேண்டுகின்ற விடயங்கள் பின்வருமாறு:

(I) வரவு செலவுத்திட்ட உரையில் உள்ளடக்கப்பட்டுள்ளதன் பயனாக ஏற்கனவே அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்ட கொள்கை ரீதியிலான விடயங்கள் தவிர்ந்த ஏனைய முக்கியமான கொள்கை விடயங்கள்,

(II) வரவு செலவுத்திட்ட உரையில் / வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதன் பயனாக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் தவிர்ந்த அரசாங்க கொள்கை தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித் திட்டங்களும் கருத்திட்டங்களும்,

(III) பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள (தனிப்பட்ட உறுப்பினர்கள் சட்டமூலங்களும் அடங்கலாக) சகல சட்டமூலங்களும்,

(IV) அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் இயைபுள்ள சட்டங்களின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக அவரினால் விடுக்கப்பட்ட கட்டளைகள்,

(V) அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் / சர்வதேச நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்படவுள்ள சகல உடன்படிக்கைகளும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளும்,

(VI) அப்போதைய தேசிய கொள்வனவு முகவராண்மையினால் வெளியிடப்பட்ட கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2006.10.05 ஆம் திகதியிடப்பட்ட 6 ஆம் இலக்க குறைநிரப்பியில் 2.14.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி எல்லையை விஞ்சுகின்ற கேள்வி அளிப்புகள்,

(VII) நிதி, திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரசாங்க கேள்வி நடைமுறையின் II ஆம் பகுதியின் 232 ஆம் வழிகாட்டலின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்படும் இணக்கப்பேச்சுக் குழுக்களின் நியமனம்,

(VIII) நிதி ஒழுங்குவிதிகள், தாபன விதிக் கோவை, அரசாங்க நிதி. திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரசாங்க கேள்வி நடைமுறை மீதான தேசிய கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் அரசாங்க கேள்வி நடைமுறை வழிகாட்டல்களின் II ஆம் பகுதி ஆகியவற்றில் உள்ள ஏற்பாடுகளிலிருந்து தேசிய நலனின் பொருட்டு விதி விலக்கான சந்தர்ப்பங்களில் விலகிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக அதிகாரத்தை நாடுதல்.

(IX) வரவு செலவுத் திட்டத்திலிருந்து குறித்தொதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை மாற்றுவதன் மூலம் செலவுகள் செய்ய முடியாதவைகளும் அடுத்த வரவு செலவுத் திட்டம் வரை பிற்போட முடியாதவைகளுமான அவசர விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீடுகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்,

(X) வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணக்கணக்கு எல்லைகளைத் திருத்துதல்,

(XI) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக சனாதிபதியாக என்னால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் தவிர்ந்த, அரசியலமைப்பின் 55(3) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மாவட்ட செயலாளர்கள் அடங்கலாக சகல திணைக்களத் தலைவர்களினதும் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான விடயங்கள்,

(XII) அரசியலமைப்பின் 55(4) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான சகல கொள்கை விடயங்களையும் வழங்குவதற்கும் நிர்ணயிப்பதற்கும் அங்கீகாரம் வழங்குதல்,

(XIII) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மீளமைக்கப்படும் வரைக்கும் அமைச்சரவையின் 2009 மே மாதம் 06 ஆம் திகதியிடப்பட்ட தீர்மானத்தின்படி (அமைச்சரவைச் செயலாளரின் அ.ப. இல. 09/1041/360/034 கொண்டதும் 2009.11.11 மற்றும் 2010.02.25 ஆம் திகதிகளைக் கொண்டவைகளுமான சுற்றுநிருபக் கடிதங்களின் நியதிகளின் பிரகாரம் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக) இடைக்கால ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்,

(XIV) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் நியதிச் சட்ட சபைகளினதும் ஆண்டறிக்கைகளையும் கணக்குகளின் கூற்றுக்களையும் / வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்குதல்.

02. **அங்கீகாரம் பெறுவதற்கு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படத் தேவையற்ற விடயங்கள்**

(I) அரசியலமைப்பின் அல்லது பிற எந்த எழுத்திலான சட்டத்தின் அல்லது நிதி ஒழுங்குவிதிகள், தாபன விதிக் கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகள், கொள்வனவு வழிகாட்டல்கள் முதலியனவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவை தவிர்ந்த ஏனைய அதிகாரபீடங்களிடம் கையளிக்கப்பட்ட (அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவைகளையும் உள்ளடக்கி) விடயங்கள்,

(II) அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் நியதிகளின் பிரகாரம் பிற அதிகாரபீடங்களிடம் கையளிக்கப்பட்ட விடயங்கள் மீது,

(III) இயைபுள்ள சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலன்றி அமைச்சரொருவர், எந்த எழுத்துமூலச் சட்டத்திலும் குறித்துரைக்கப்பட்டுள்ள சில தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதிலிருந்து அல்லது விதித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகளிலிருந்து விலகிச் செல்வதற்கான அங்கீகாரத்தை நாடாமல் இருத்தல் வேண்டும்.

(IV) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் மற்றும் நியதிச் சட்டசபைகளினதும் பணிப்பாளர்களினால் செய்யப்படும் வர்த்தக ரீதியாக ஒப்பேற்றப்படத்தக்க தீர்மானங்களுக்கு முரணாக தீர்மானங்களை எடுப்பதற்கு அத்தீர்மானங்கள் தேசிய நலனுக்கு அத்தியாவசியமானவைகளாகவிருந்தாலன்றி அவற்றை எடுப்பதற்கு அங்கீகாரம் நாடப்படலாகாது.

(V) நீதிமன்றமொன்றில் முடிவுறாமல் தீர்ப்பை எதிர்பார்த்த நிலையில் உள்ள விடயங்கள் தொடர்பான சட்ட நடவடிக்கை.

(VI) நீதிமன்றக் கட்டளையொன்றை நடைமுறைப்படுத்துகை.

(VII) தற்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கிடையில் கடமைகளை மீளக் குறித்தொதுக்குதல் மூலம் அல்லது பதில் கடமை அடிப்படையில் அல்லது கடமைகளைப் புரியும் அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்ளக்ககூடிய பணிகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்க சேவையில், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் இளைப்பாறிய உத்தியோகத்தர்களை மீளப்பணிக்கமர்த்துதல்.

(VIII) விசேட தொழில்சார்/ தொழில்நுட்பத் துறைகளில் / தேர்ச்சி பெற்ற தொழில்களில்கூட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக, பொதுத் திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி ஆலோசகர்களை / உசாத்துணைவர்களை நியமித்தல்.

03. **அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல்**

(I) மேற்போந்த 01 ஆம் 02 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக மாத்திரம் மாண்புமிகு அமைச்சர்களின் ஆலோசனைக்கமைவாக அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தலானது, அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் செம்மை தொடர்பில் அமைச்சின் செயலாளர் அவற்றிற்கு பொறுப்பானவராக்கப்படுதல் வேண்டும். ஆயினும் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயங்கள் மற்றும் பிரேரிப்புக்கள் தொடர்பிலான பொறுப்பு இறுதியில் இயைபுள்ள அமைச்சருக்குரியதாகும்.

(அ) சமர்ப்பிக்கப்படும் பிரேரிப்புகள் "மஹிந்த சிந்தனை – எதிர்காலத்திற்கான தொலைநோக்கு" என்பதன் பரந்த கட்டுக்கோப்புடனும் அந்நோக்கிற்கு அமைவாக ஒவ்வொரு துறைக்கும் தயாரிக்கப்பட்டுள்ள விரிவான திட்டங்களுக்கும் அமைவாக இருக்க வேண்டுமென்பதோடு, பிரேரிக்கப்படுகின்ற தீர்வுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது இயைபுள்ள விடயங்கள் தொடர்பிலான தகவல்கள் யாவும் கவனமாக ஆய்வு செய்யப்பட்டதன் பின்னராகும். இருக்க வேண்டுமென்பதோடு, தயாரிக்கப்படுகின்றமையையும் அப் பிரேரிப்புகள் தொடர்பிலான தகவல்கள் யாவும் கவனமான ஆய்வொன்றின் பின் சமர்ப்பிக்கப்படுகின்றமையையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(ஆ) விஞ்ஞாபனத்திலுள்ள பிரேரிப்பு பிற அமைச்சுகள் தொடர்பிலானதாக விருக்குமிடத்து அல்லது அவற்றின்மீது தாக்கமொன்றைக் கொண்டிருக்குமிடத்து முன்உடன்பாட்டை அடைவதன் பொருட்டு இயைபுள்ள அமைச்சுக்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்படல் வேண்டும். அத்தகைய விடங்களில் கூட்டு விஞ்ஞாபனமொன்றை இயைபுள்ள அமைச்சர்கள் சமர்ப்பிப்பது கூடுதலான அளவில் பொருத்தமானதாகவிருக்கம்.

(இ) பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள சட்டமூலங்களுக்கு அங்கீகாரத்தினை நாடிச் சமர்ப்பிக்கப்படுகின்ற விஞ்ஞாபனங்கள், இயைபுள்ள சட்டமூலத்தை மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதோடு, இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளுடன் முரணற்றவையெனவும் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தினால் விதிக்கப்படும் எந்த மட்டுப்பட்டிற்கும் உட்படமாட்டாதவை எனவும், அவை பாராளுமன்றத்தினால் சட்டரீதியாக இயற்றப்படலாம் எனவும் குறிப்பிட்டு கௌரவ சட்டமாஅதிபரினால் வழங்கப்படுகின்ற சான்றிதழை இணைத்தல் வேண்டும்.

(ஈ) பல்வேறு சட்டங்களின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள தொடர்புடைய ஒழுங்கு விதிகள், அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்படவுள்ள உடன்படிக்கைகள் ஆகியன சட்டவரைநரின் ஒருப்பாட்டுடனும் சேர்ந்து கௌரவ சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(உ) கொள்வனவு வியடங்கள் தொடர்பிலான விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்கும் போது கேள்விச்சபையின் தீர்மானம் பற்றி சகல வெற்றிபெறாத கேள்வியாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும், கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு (அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 8 ஆம் அத்தியாயம் – 2006 இல் விதித்துரைக்கப்பட்டுள்ளதன்படி) மேன்முறையீட்டினைச் சமர்ப்பிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட கால அவகாசம் வெற்றிபெறாத கேள்வியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதெனவும், கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதெனவும் / கிடைக்கவில்லையெனவும் விசேடமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். கொள்வனவு மேன்ளமுறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அதன் சிபாரிசுகள் தொடர்பிலும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டு அதன் பிரதியொன்றினையும் இணைத்தல் வேண்டும்.

(ஊ) விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமானது அமைச்சரவையினால் இதற்கு முன்னர் கலந்துரையாடப்பட்டிருப்பின் அந்த அமைச்சரவைப்பத்திரத்தின் இயைபுள்ள இலக்கமும் கூட்டத்தின் திகதியும் புதிய விஞ்ஞாபனத்தில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

(எ) அமைச்சரவையினால் அறிக்கையொன்று கோரப்பட்டு இயைபுள்ள அறிக்கையானது விஞ்ஞாபனமொன்றின் வடிவில் சமர்ப்பிக்கப்படும் போது மூல விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களும் புதிதாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற விஞ்ஞாபனத்தில் சுருக்கமாக இணைக்கப்படுதல் வேண்டும்.

(II) நிதி, திட்டமிடல் அமைச்சரினதும் இயைபுள்ள ஏனைய அமைச்சர்களினதும் அவதானிப்புரைகளின்றி கிடைக்கப்பெறுகின்ற விடயமொன்றின் மீது தீர்மானமொன்றை எடுப்பது சாத்தியமற்றதாகையினால் அந்த விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் அமைச்சானது கவனமான ஆய்வின் பின்னர் அவற்றின் அவதானிப்புரைகளை சமர்ப்பிப்பதை இயலச் செய்வதன் பெருட்டு அந்த விஞ்ஞாபனத்தை மிக முன்னதாக அமைச்சரவை அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(III) அமைச்சரவை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் முதலில் குறித்த விடயத்தைக் கையாளும் இயைபுள்ள அமைச்சரவை உபகுழுவிற்கு அனுப்பப்படும், அத்தகைய விஞ்ஞாபனங்கள் அமைச்சரவையினால் இயைபுள்ள அமைச்சரவை உபகுழுவின் சிபாரிசுகளுடன் மட்டுமே கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(IV) சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் இணைப்புக்கள் ஆங்கில மொழியில் சமர்ப்பிக்கப்படலாம்.

(V) அங்கீகாரம் நாடப்படும் விடயம் இந்த விஞ்ஞாபனத்தின் இறுதிப்பந்தியில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ
சனாதிபதி

2010 மே மாதம் 05 ஆம் திகதி.